1993 மார்ச் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கிருஷ்ணன், முடியுங்கள். இரண்டு நிமிடம் கொடுத்தேன். ஏதாவது ஒரு பிரச்சினையோடு முடியுங்கள்.

திரு. எஸ். எம். கிருஷ்ணன் : இன்றைக்கு இத்தோடு முடிக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் பேசி முடித்ததாகக் கருதப்படுகிறது. அவர் இத்தோடு முடித்துக் கொள்கிறார்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18-3-1993) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-07 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7 பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்,

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

108. இம்மாநிலத்தில் நுழைகின்ற அயல் மாநில சுற்றுலா இயக்கூர்திகளுக்கு தற்காலிக உரிமம் வழங்குவதற்கு விகிதாச்சார அடிப்படையில் வரி வசூலிப்பது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 10-7-1992-ஆம் நாளிட்ட 1122-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

109. 1966-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 17-2-1992-ஆம் நாளிட்ட 189-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1966-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 45(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

110. சென்னை, அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம் பகுதி-1, 2 மற்றும் முகப்பேர் கிழக்கு மற்றும் மேற்கு ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றுதல் ஆகிய திட்டங்களை நிறைவேற்றுதல் குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 7-1-1991-ஆம் நாளிட்ட 3—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1978-ஆம் ஆண்டு சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1978) 88(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

[1993 மார்ச் 17

111. 1991-92-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டு அறிக்கை மற்றும் கணக்குகள். [1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

112. 1991–92 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் பதிமூன்றாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

113. 1991-92ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சீட்டுக் கழகத்தின் எட்டாவது ஆண்டறிக்கை. [1956—ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

---

60. உள் (திரைப்படங்கள்) துறையின் 11-10-1988–ஆம் நாளிட்ட 2233–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைக்கான பிழை திருத்தம்.

61. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தி மூன்றாவது அறிக்கை, 1992-93.

62. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தி நான்காவது அறிக்கை, 1992-93.

63. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தி ஐந்தாவது அறிக்கை, 1992-93.

64. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தி ஆறாவது அறிக்கை, 1992-93.

65. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தி ஏழாவது அறிக்கை, 1992-93.

66. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தி எட்டாவது அறிக்கை, 1992-93.

67. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தொன்பதாவது அறிக்கை, 1992-93.

68. அரசு உறுதிமொழிக் குழுவின் ஏழாவது அறிக்கை, 1992-93.

69. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் (ஒன்பதாவது பட்டியல்) (வரிசை எண். 1 முதல் 100 வரை).